# இருதயமும் மனமும் /Heart and Mind

Praise the Lord: கிறிஸ்துவின் தேவசமாதானம் நம் ஒவ்வொருவரையும் ஆட்கொள்வதாக.
நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்கு கொடுக்கும்படிக்கு……….
உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்) எரே.29:11-13

## Let us pray. ..

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது தேவனுடைய ஈவு; (எபேசியர் 2:8) அதற்காக தம்முடைய ஒரேபேறான குமாரனை.. தேவன் அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. (1 யோ. 4:9-10)

இப்படி தேவனுடைய அன்பினாலே, நாம் இரட்சிக்கப்பட்டோம்…….

*இந்த இரட்சிப்பிலே….* முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். (மத்தேயு 24:13)

*நமது எண்ணங்கள், உலகத்து சூழ்நிலைகள் நம்மை ஆட்கொண்டுவிடாதபடி,…*

பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக நம்மை நாமே கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்ற வசனத்தை அறிந்து, வாசித்து தியானித்திருக்கிறோம். கடந்த வாரம் மேலும் விளக்கமாக கற்று தியானிக்க வாய்ப்பு கிடைத்தது. கர்த்தருடைய வசனம் ஜீவனுள்ளது. அது நமக்குள் முதலில் கிரியை செய்ததைவிட அதிகமாக இப்பொழுது கிரியை செய்ய முயற்சிக்கிறது. ஜீவனுள்ள வசனத்தின் கிரியைக்கு நமது இருதயமும் மனமும், சூழ்நிலையும் இடம் கொடுக்கிறதா? என்பதை தியானித்துப் பாருங்கள்…...

*வேதம் சொல்கிறது:*

உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; (மத்தேயு/Matthew 22:37-38)
Jesus replied: " 'Love the Lord your God with all your heart and with all your soul and with all your mind.'

*பலநேரங்களிலே இப்படி கர்த்தரிடம் அன்பகூரமுடியாதபடி நமது பெலவீனங்கள் நம்மை தடுக்கிறது.*

Ref: Dictionary

இருதயம்: மென்மையான உணர்வுகளுக்கு இருப்பிடமாக கூறப்படுவது.
The vital center and source of one's being, emotions, and sensibilities.

மனம்: 1. ஒருவரின் எண்ணம், உணர்வு போன்றவற்றுக்குக் காரணமாக அமைவது: உள்ளம், mind
2. விருப்பம், intention: desire; mind.
The human consciousness that originates in the brain and is manifested especially in thought, perception, emotion, will, memory, and imagination.

மனம்….., இருதயத்தின் எண்ணம் உணர்வுகளுக்கு காரணமாக உள்ளது என்றாலும், பலநேரங்களிலே நமது இருதயமும், மனமும் ஒத்துப்போவதில்லை.
நமது அன்றாட வாழ்க்கையின் சூழ்நிலைகளை நன்றாக சிந்தித்தால் இதை உணரலாம்.
அப்படி நாம் மனதிலே உணர்ந்தாலும், பலநேரங்களிலே நம் இருதயம் அதை ஒத்துக்கொள்ளாது.
எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?
The heart is deceitful above all things and **beyond cure**. Who can understand it? (NIV) (Jeremiah 17:9)
கர்த்தரே…இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறார்.
I the LORD search the heart and examine the mind, " (NIV)

இந்த மகா கேடுள்ள இருதயத்தை வைத்துக்கொண்டு, ஆண்டவரே எப்படி நான் உம்மை முழு இருதயத்தோடும் அன்பு கூறுவேன்? எப்படி நான் உம்மை முழு இருதயத்தோடும் தேடுவேன்??
என்ற உணர்வும் ஏக்கமும் நம் ஒவ்வொருவரையும் ஆட்கொள்ள வேண்டும்.

இதற்கு என்ன வழி? சகலமும் பரிபூரணமாக வாசம் செய்யும் கிறிஸ்துவே வழி…..

**சங்கீதம்/Psalm 51:10 (பக்கம் 701)**

**தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.**
Create in me a pure heart, O God, and renew a steadfast spirit within me. (NIV)
இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். (மத் 5:8)
Blessed are the pure in heart, for they will see God. (NIV)

தேவனுடைய பிரசன்னத்தை உணரவும், தேவனை தரிசிக்கவும் நமக்கிருக்கும் வாஞ்சையைப் போலவே, நம்மை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக நம்மை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க, நம் இருதயம் வாஞ்சிக்குமானால்…….

ஆண்டவரே பெலகீனமான என் இருதயத்தை இப்பொழுதே எடுத்துப்போட்டுவிட்டு…..
தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்,
**அந்த இருதயத்தை பரிசுத்தமாக காத்தக்கொள்ள உம்முடைய**
நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே (மனதிலே) ஒவ்வொரு நாளும்…புதுப்பியும்…..என்று மன்றாட ஒரு வாஞ்சையும் உணர்வும் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவேண்டும்.

**இருதயத்தையும் மனதையும் கட்டுப்படுத்துகிற ஆவி (சரியான ஆவி) நம்மிலே இருக்கவேண்டும்.**
Ref: Dictionary:
ஆவி: Spirit 1. the principle of conscious life; the vital principle in humans, animating the body or mediating between body and soul.
2.**the divine influence as an agency working in the human heart.**
சத்திய ஆவியானவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். The spirit of truth lives with you and will be in you. (John 14:17)
இருதயத்திலே வேறு எந்த ஆவியும் புகுந்துவிடாமலிருக்க,
முழுஇருதயமும் உமது ஆவியினாலே நிரப்பட்டும். ஆமென்.
தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.
சுத்தமான இருதயத்தை நமக்கு சிருஷ்டிப்பது கர்த்தருக்குப் பெரிய காரியமில்லை.
அவருடைய நாமமே "யேகோவா ஓசேனு" உருவாக்கும் கர்த்தர். (சங்கீதம் 95:6)
இப்பொழுது கர்த்தரிடம் நாம் மன்றாடினால், அவர் நமக்கு சுத்த இருதயத்தைக் கொடுப்பார்.
அதை பரிசுத்தமாக காத்து, முழுஇருதயத்தோடும் அவரிடம் அன்பு கொண்டு, முழுஇருதயத்தோடும் அவரைத் தேடி, அவரோடு முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்.
உலகத்தார்கள் இருதயத்தின் சிந்தனைகளை கட்டுப்படுத்தவும் அதன்மூலம் நாம் உன்னதமான நிலையை, தன்னுடைய முயற்சியிலே அடையலாம் என பல வழிகளை சொல்கிறார்கள். மக்கள் ஆவலோடு கேட்கிறார்கள். ஒருக்காலும் நம்மாலே (மனிதனாலே) முடியாது……
கர்த்தர் ஒருவரே, இருதயத்தை ஆராய்கிறவரும்
உள்ளிந்திரியங்களைச் (மனதை) சோதித்தறிகிறவருமாயிருக்கிறார்.
எவர்கள் தேவனுடைய ஆவியினாலே **நடத்தப்படுகிறார்களோ**, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். (ரோ8:14)
"யேகோவா ஓசேனு" உருவாக்கும் கர்த்தராக சுத்த இருதயத்தை கொடுப்பவரும் அவரே.
"யேகோவா ரோஹி" மேய்ப்பராக இருந்து, இருதயத்தை காத்துக்கொள்பவரும் அவரே.
சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென். (ரோமர் 11:36)
சங்கீதம்/Psalm 51:10-14 (பக்கம் 701)
சங் 51:10 தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் **உள்ளத்திலே** புதுப்பியும்.
Create in me a pure heart, O God, and renew a steadfast spirit within me. (NIV)
உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும். Do not cast me from your presence or take your Holy Spirit from me.
உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும். Restore to me the joy of your salvation and grant me a willing spirit, to sustain me.
**அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்.**
**Then I will teach transgressors your ways, and sinners will turn back to you.**
மீண்டுமாக…….சங்கீதம்/Psalm 51:14
**அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்.**
**Then I will teach transgressors your ways, and sinners will turn back to you.**
கர்த்தரை அறியாத, நமது உற்றார் உறவினர்களும் நண்பர்களும், இந்த ஆலயத்தை சுற்றிலும் உள்ளவர்களும் மனந்திரும்ப கர்த்தர், நம்மை கிருபையோடு வழிநடத்துவார்.
**மீண்டுமாக…….சங்கீதம்/Psalm 51:10**
தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் **உள்ளத்திலே** புதுப்பியும்.
ஆண்டவரே எங்கள் பெலவீனங்களையெல்லாம் நீக்கி, சுத்த இருதயத்தை இப்பொழுதே சிருஷ்டித்து
இருதயத்தை பரிசுத்தமாக காத்து, உம்மிடத்திலே முழு இருதயத்தோடும் அன்புகூற உம்முடைய நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே (மனதிலே) ஒவ்வொரு நாளும் புதுப்பியும் ஆண்டவரே…..என்று அனைவரும் ஒருமனப்பட்டு எழுந்துநின்று மன்றாடுவோம்.
நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்.
**I will go before you And make the crooked places straight; …(Isaiah 45:2) (NKJV)**
ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்.
ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.
…the Spirit helps us in our weakness. We do not know what we ought to pray for, but the Spirit himself intercedes for us with groans that words cannot express. And he who searches our hearts knows the mind of the Spirit, because the Spirit intercedes for the saints in accordance with God's will. (Romans 8:26-27)

## Let us Pray